## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 60/2023 | **CNR No.** | : | TNKI13-000075-2023 |
| **Name** | : | குமரேசன் | **Father's Name** | : | பொன்னுசாமி (எ) அண்ணாலை |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 75 | **Village** | : | மண்ணாண்டியூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 12:41 PM | **End Time** | : | 1:00 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 10.12.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும், 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜீவனம்சம் கோரியும், நிலத்தை விற்பனை செய்ய கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுரேஷ் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். அவருக்கு எதிராக மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள் மற்றும் 1 மகள் ஆவார்கள்.

(2) என்னிடம் காட்டப்படும் பிரமணாபத்திரம் நான் தாக்கல் செய்தது தானா என்றால் சரிதான். எனது பிரமணாபத்திரத்தில் 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள் என்று சொல்லியுளேன் என்றால் சரிதான், 1 மகள் 2வது மனைவியின் மகள் ஆவார். எனது 2வது மனைவியின் பெயர் என்னவென்றால் ராஜம்மாள் ஆகும். வழக்கு சொத்தை தவிர எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் பழைய நிலம் 2 ½ **ஏக்கர்** உள்ளது. நான் சொல்லும் 2 ½ **ஏக்கர்** நிலம் யார் பெயரில்

உள்ளது என்றால் பேரக்குழந்தை அண்ணாமலை மகன் கார்த்திகேயன் பெயரில் தானமாக கொடுத்துள்ளேன்.

(3) மேற்படி சொத்து பூர்வீக சொத்தா என்றால் ஆமாம். எனது வழக்குரையில் மேற்படி சொத்துக்களின் விவரங்கள் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் சுரேஷ் பெயரில் கிரையம் வாங்கிய சொத்தாகும். நான் சொல்லும் பூர்வீக சொத்தின் விவரங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்தில் எத்தனை மரங்கள் உள்ளது என்றால் சுமார் 66 தென்னை மரங்கள் உள்ளது. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் அதே நிலத்தில் நானும், அண்ணாமலையும் அவரது குடும்பமும் குடியிருக்கிறோம். அண்ணாமலை என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் பூ கடை வைத்துள்ளார். பூ கடையை முழுவதும் அவர் தான் நடத்தி வருகிறாரா என்றால் ஆமாம்.

(4) எனது வழக்குரையில் 1ம் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள அண்ணாமலை எனது மகன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு வருவாய் வருகிறது என்று நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது மகள்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

(5) **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai